**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்**

**DEPOSITION OF WITNESSES**
(Chapter XXIII Cr.P.C)

**CMP.NO.1132/2025**
**WITNESS NO.1**
**Date: 20.09.2025**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. ஜெயக்குமார் | வயது | 66 |
| கணவர்/தந்தை பெயர் | சுவிசேஷம் | தொழில் | |
| முகவரி | மாம்பாக்கம், திருப்போரூர் வட்டம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **20th day of September 2025**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**பிரமாண வாக்குமூலம் –**

1. நான் மாம்பாக்கத்தில் உள்ள எஸ்.பி.ஐ ஒ.எ. யூனிட்டி என்கேளவ் என்ற அடுக்குமாடி குடியிருப்பில் கடந்த 2019 ஆம் ஆண்டு முதல் என் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். அது என்னுடைய சொந்த வீடு. நான் ஓய்வு பெற்ற ஊரக வளர்ச்சித் துறை கூடுதல் இயக்குனர். அந்த அடுக்குமாடி குடியிருப்பு கட்டுமானத்தில் அதை கட்டிய பிள்டர்ஸ் அதிக விதி மீறல்கள் செய்து அதை கட்டியுள்ளார்கள். அந்த குடியிருப்பில் கழிவு நீர் சுத்தீகரிப்பு மையம் உள்ளது. அதற்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தில் இருந்து அதை செயல் படுத்த கூடிய அனுமதி வாங்கி இருக்க வேண்டும்.

ஆனால் அவ்வாறு அனுமதி வாங்காமல் அந்த உத்திகரிப்பு மையத்தை இது நாள் வரையில் இயக்கி வருகிறார்கள். அந்த அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள மூன்று பிளாக்குகளில் விதிமுறை மீறல்கள் இருப்பதால் அங்கு வசிக்கும் குடியிருப்பு வாசிகளை காலி செய்ய வேண்டும் என்று டி.டீ.சி.பி மூலமாக உத்தரவிடப்பட்டது.

2. அந்த கழிவுநீர் சுத்திகரிப்பு மையத்தை முறையாக பராமரிக்காததால் வீடுகளில் கழிவறையை பயன்படுத்த முடியாது மிகவும் துர்நாற்றம் வரும். கழிவுநீர் சுத்திகரிப்பு மையம் 4 அமைக்கப்பட்டு இருக்க வேண்டும் ஆனால் அங்கு ஒன்றுதான் உள்ளது. அதுவும் விதிமுறை மீறலாகும். அந்த சுத்திகரிப்பு மையத்தை மேல் தளத்தில் அமைக்காமல் அடித்தளத்தில் அமைத்துவிட்டார்கள். அதுவும் ஒரு விதிமுறை மீறலாகும். மேலும் கடந்த 2019 ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரை தீ பாதுகாப்பு உரிமத்தை புதுப்பிக்காமல் இருந்து வருகறிர்கள். மேலும் கழிவுநீர்களை முறையாக லாரிகள் மூலமாக அதற்கான ஒதுக்கப்பட்ட பெருங்குடியில் உள்ள சுத்திகரிப்பு நிலையத்தில் அப்புறப்படுத்த வேண்டும். ஆனால் குடியிருப்பு நலச்சங்க பொறுப்பாளர்கள் அதனை அடுக்குமாடி குடியிருப்பின் அருகிலேயே அப்புறப்படுத்துகிறார்கள். மேலும் லாரிகள் மூலமாக கொண்டு சென்றாலும் இரவு நேரங்களில் எவ்வித பாதுகாப்பும் இல்லாமல் சாலைகளில் அதை அப்புறப்படுத்துகிறார்கள்.

3. மேலும் அந்த நல சங்கமும் முறையாக செயல்படவில்லை. மேற்கண்ட விதிமுறைகளை சரி செய்வதற்காக நாங்கள் அரசு அதிகாரிகளை அணுகினோம். அதிகாரிகள் அதன் அடிப்படையில் அதிகாரிகள் எங்கள் குடியிருப்பை ஆய்வு செய்து 3

பிளாக்களில் உள்ள வீடுகளுக்கு உள்ளவர்களை வெளியேற அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். மேலும் சுத்திகரிப்பு மையம் 4 இருக்க வேண்டும் என்பதையும் கண்டறிந்து அதற்கான நடவடிக்கைகளையும் எடுத்தார்கள். மேலும் கழிவுநீர்களை முறையாக பெருங்குடியில் உள்ள மையத்திற்கு கொண்டு சென்று அகற்ற வேண்டும் என்றும் உத்திரவிட்டார்கள். தீ பாதுகாப்பு உரிமம் புதுப்பிக்கப்படவில்லை என்பதை அறிந்து அதனையும் உடனடியாக புதுப்பிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்கள்.

4. மேலும் 2020 ஆம் ஆண்டு நடந்த அசாதாரண பொதுக்குழு கூட்டம் செல்லாது என்று மாவட்ட பதிவாளர் உத்தரவிட்டார். அங்கு நடந்த விதி மீறல்களை நானும் என் உடன் இருந்தவர்களும் கண்டறிந்ததால் அப்போதைய குடியிருப்பு நல சங்க தலைவர் மோகன் என்பவர் எங்கள் மீது கோபம் கொண்டு சங்கம் மூலமாக நாங்கள் விதிமீறலில் ஈடுபட்டுள்ளதாக எங்களுக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றி அதனை அனைத்து உரிமையாளர்களுக்கும் அனுப்பி வைத்தார். அதற்கு எதிர்ப்பு தெரிவித்து விதிமுறை மீறலில் ஈடுபடுவது பில்டர்சும், குடியிருப்பு நல சங்க நிர்வாகிகளும் தான் ஈடுபடுவதாக வாட்ஸ் அப்பில் கருத்து தெரிவித்தேன்.

5. எனவே அதனால் கோபமுற்ற இந்த மனுவின் எதிர்மனுதாரர் நாராயணன் என்பவர் 11.04.2025 அன்று குடியிருப்பு சங்க உறுப்பினர்கள் உள்ள வாட்ஸ் அப் நான்கு குழுக்களில் அரசு அதிகாரியாக இருந்த என்னை அரசு தற்காலிக பணிநீக்கம் செய்ததாகவும் அதற்கான காரணத்தை நான் சொல்ல முடியுமா என்று எனக்கு எதிராக அவதூறு கருத்தை தெரிவித்தார். அதனை எதிர்த்து நான் என்னுடைய வழக்கறிஞர் மூலமாக கடந்த 14.07.2025 அன்று எதிர்மனுதாரருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு

அனுப்பினேன். ஆனால் அந்த வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக் கொள்ளாமல் எதிர்மனுதாரர் திருப்பி அனுப்பிவிட்டார். (14.07.2025 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் திருப்பட்ட பதிவு அஞ்சலுறை தாக்கல் செய்கிறேன்).

6. நான் வெளியூரில் இருந்து குடி வந்ததாலும் அங்கு நடக்கும் விதிமீறல்களை நாங்கள் கேட்கக் கூடாது என்பதாலும் அரசு அதிகாரிகளை அணுகி எந்த முறையீடும் செய்யக்கூடாது என்பதற்காக என் மீது மேற்கண்ட அவதூறை எதிர்மனுதாரர் பரப்பியுள்ளார். அதன் காரணமாக எனக்கும் என்னுடைய குடும்பத்திற்கும் மிகுந்த மன உளைச்சல் ஏற்பட்டது. எதிர்மனுதாரர் எனக்கு எதிராக கூறிய குற்றச்சாட்டிற்கு எவ்வித அடிப்படை ஆதாரமும் இல்லை. நான் என்னுடைய பணிக்காலத்தில் எப்போதும் தற்காலிக பணிநீக்கம் உத்தரவுக்கு ஆளாகியது இல்லை என்பதை உறுதிபடுத்துவதற்காக என்னுடைய துறையில் இருந்து நான் கடிதமும் பெற்றுள்ளேன். (30.04.2025 தேதியிட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெற்ற கடிதம் நகல் தாக்கல் செய்கிறேன்). எனவே இந்த நீதிமன்றத்தில் நான் இந்த தனிநபர் புகாரை தாக்கல் செய்துள்ளேன். எதிரி எனக்கு எதிராக அவதூறு பரப்பி என்னுடைய நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியதாலும் எனக்கும் என் குடும்பத்திற்கும் மன உளைச்சல் ஏற்படுவதற்காகவும் எதிரியின் மீது உரிய சட்ட பிரிவின் கீழ் இந்த வழக்கை கோப்பிற்கு எடுத்து உரிய தண்டனை வழங்கியும் எதிரிடமிருந்து எனக்கு நஷ்ட ஈடு பெற்று தரக் கோரியும் கேட்டுக்கொள்கிறேன்.

S/d- K.Nilavarasan, 20.09.2025
District Munsif cum Judicial Magistrate,
Thiruporur.